**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.**

**முன்னிலை: செல்வி. சு. அபூர்வா, பி.ஏ., எல்.எல்.பி.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, பழனி.**

**2025 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 3 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை**

**I.A.No.6/2024**

**in**

**O.S No.114/2022**

M.செல்லமுத்து ...மனுதாரர்/வாதி

/எதிர்/

1. தர்மராஜ்

2. கார்த்தி

3. மாவட்ட ஆட்சியர் அவர்கள்

திண்டுக்கல்.

4. வட்டாட்சியர் அவர்கள், பழனி.

5.கிராம நிர்வாக அலுவலர் அவர்கள்,

தொப்பம்பட்டி. ...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதி விசாரணைக்கு

வந்தபோது, மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.**V.செல்வகுமார்,M.A.,B.L.,** அவர்கள் ஆஜராகியும், 1, 2 எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.S.ஜெயராமன்,B.A.,B.L.,** அவர்கள் ஆஜராகியும், 3 முதல் 5 எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யாததால் தோன்றாத் தரப்பினர்களாக கருதப்பட்டு, ஒருதலைப்பட்சப்படுத்தப்பட்டும், இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், இதுநாள்வரை இந்நீதிமன்றப் பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**உத்தரவு**

**1.** இந்த மனுவானது மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள வழக்குரையை திருத்தம் செய்ய அனுமதிக்கக் கோரி உரிமையியல் நடைமுறைச் சட்ட கட்டளை **6 விதி 17 மற்றும் பிரிவு 151–ன்** படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுச் சுருக்கம்:**

2.1. மனுதாரர்/வாதி எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது மனுச் சொத்துக்களைப் பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்து அதில் புலஎண்.527 பொதுப்பாதையில் இருந்து தொடங்கி அதன்வழியாக புலஎண்.502,503,504 ஆகிய நிலங்களின்

வழியாக மனுதாரர்/வாதி தன்னுடைய நிலத்திற்கு சென்றுவருவதை எதிர்மனுதாரர்களோ, அவர்வகை ஆட்களோ ஏஜெண்டுகளோ தடையும் இடைஞ்சலும் மற்றும் மேற்படி வண்டிப்பாதையை அழிக்கவோ, ஆக்கிரமிப்பு செய்யவோ கூடாதென 1,2 எதிர்மனுதாரர்கள் மீது வழக்கு தாக்கல் செய்து, அதில் ஆணையர் நியமனம் கோரி ஐ.ஏ.எண்.4/2022–ல் மனுதாக்கல் செய்யப்பட்டு அதன்படி நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யப்பட்டு அதில் மனுச்சொத்தினை பார்வையிட்டு அளந்து அத்துமால் செய்து, அறிக்கையுடன் கூடிய வரைபடம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது.

2.2. அதனைத் தொடர்ந்து, மேற்படி ஆணையர் அவர்கள் வழக்குச் சொத்தினை அளவீடு செய்யும் சமயம் தான் 1, 2 எதிர்மனுதாரர்களின் சர்வே எண்கள் தற்போது உட்பிரிவாகியுள்ள விபரம் தெரியவந்தது என்றும், அதன்படி பார்க்கையில் சர்வே எண்.502,503,504 ஆகியவைகள் தற்பாது 504/2, 504/1B1, 506/4C ஆகியவைககள் என்பது மனுதாரருக்கு தெரியவந்தது என்றும், அதனால் தாவா பிராதில் 1, 2 பிரதிவாதிகளின் நிலமான பிராதில் சொல்லப்பட்டுள்ள 502,503,504 ஆகியவைகளில் வரக்கூடிய அனைத்து இடங்களிலும், பரிகார காலங்களிலும் மற்றும் பிராது மாதிரி வரைபடத்திலும் 504/2, 504/1B1,

506/4C என்று திருத்தம் செய்துகொள்ள வேண்டியிருக்கிறது என்றும், மனுவில் துலக்கப்பட்டுள்ள விபரப்படி அசல் வழக்கில் இத்துடன் மனுவில் துலக்கப்பட்டுள்ள விபரப்படி திருத்தம் செய்துகொள்ள உத்திரவிட வேண்டி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. <u>1, 2 எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரைச் சுருக்கம்:</u>

3.1. மனுதாரர் பிரதிவாதிகள் மீது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றும், மேற்படி அசல் வழக்கில் எதிர்மனுதாரரால் எதிர்உரை தாக்கல் செய்யப்பட்டு, நிலுவையில் இருந்து வருகிறது என்றும், மேற்படி வழக்கில் நீதிமன்றத்தால் நீதிமன்ற ஆணையரும் நியமனம் செய்யப்பட்டு ஆணையரும் ஸ்தல பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்த பின்பு மனுதாரர் இம்மனு தாக்கல் செய்துள்ளது எவ்வகையிலும் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என்றும், ஆணையர் அறிக்கை தாக்கல் செய்தபின்பு இவ்வாறு திருத்தம் செய்வது புதிதாக சாட்சியினை உருவாக்குவதற்கு ஒப்பாகிறது என்றும், பிராதில் பிராது மற்றும் மாதிரி வரைபடத்தில் உள்ள புல எண்கள் மாறுதல் செய்தாலே வழக்கின் வழக்குமூலமே மாறிவிடும் என்றும்,

மேற்படி வழக்கில் திருத்தம் மனுவினை திருத்தம் செய்வதற்கு எவ்வித முகாந்திரமும் இல்லை என்றும், அது அவ்வாறு திருத்தம் செய்வது புதிதாக வழக்கு தாக்கல் செய்வதற்கு ஒப்பாகிவிடும் என்றும், எனவே, மேற்படி மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

4. தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், மனுதாரர் மனு அனுமதிக்கத்தக்கதா ? இல்லையா? என்பதாகும்.

5. இருதரப்பிலும் வாய்மொழி சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. இருதரப்பு வாதுரையும் கேட்கப்பட்டது.

<u>6. தீர்வு:</u>

மனு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. அசல் வழக்கானது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், மேற்படி அசல் வழக்கின் ஆணையர் அவர்கள் வழக்குச் சொத்தினை அளவீடு செய்யும் சமயம் தான் வாதி ஆகிய மனுதாரருக்கு 1, 2 எதிர்மனுதாரர்களின் சர்வே எண்கள் தற்போது உட்பிரிவாகியுள்ள விபரம் தெரியவந்தது என்றும், அதன்படி பார்க்கையில் சர்வே எண்.502,503,504 ஆகியவைகள் தற்போது 504/2, 504/1B1, 506/4C ஆகியவைககள் என்பது மனுதாரருக்கு தெரியவந்தது என்றும், அதனால் வழக்குரையில் 1,

2 பிரதிவாதிகளின் நிலமான பிராதில் சொல்லப்பட்டுள்ள 502,503,504 ஆகியவைகளில் வரக்கூடிய அனைத்து இடங்களிலும், பரிகார காலங்களிலும் மற்றும் பிராது மாதிரி வரைபடத்திலும் 504/2, 504/1B1, 506/4C என்று திருத்தம் செய்துகொள்ள வேண்டி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பொதுவாக, வழக்குரை மற்றும் எதிர் வழக்குரையின் விவரங்களில் உள்ள குறைபாடுகளை வழக்கின் அடிப்படை தன்மை மாறாத வகையில் திருத்தம் செய்து கொள்ள தரப்பினர்களுக்கு உரிமை உள்ளது. வழக்கின் எந்த நிலையிலும் பிரச்சினையில் உள்ள பொருண்மைகளுக்கு தீர்வு காணும் நோக்கத்திற்காக தரப்பினர்கள் தங்களுக்கு தேவைப்படும் திருத்தங்களை செய்ய முடியும். ஆனால், வழக்கு விசாரணை தொடங்குவதற்கு முன்பு உரிய முயற்சி செய்தபோதும் கூட வழக்கு விசாரணைக்கு முன்பாகவே மேற்படி திருத்தத்தை செய்ய இயலவில்லை என்பதை நீதிமன்றம் திருப்தி அடையும் வகையில் விளக்கம் அளிக்க வேண்டும்.

7. மேலும், ஒரு வழக்குரையில் திருத்தம் செய்ய கோரும் மனுவை பரிசீலனை செய்யும்போது இரண்டு முக்கியமான நிபந்தனைகளை விசாரணை நீதிமன்றம் கருத்தில் கொள்ள வேண்டும் என்று மாண்பமை உச்ச நீதிமன்றம் பல வழக்குகளில் கூறியுள்ளது.

i) மனுவில் கோரியுள்ள திருத்தம் தரப்பினருக்கு இடையே உள்ள பிரச்சினையை முழுமையாக தீர்க்க தேவையானதா?

ii) எதிர் தரப்பினருக்கு அநீதி ஏற்படாத வகையில் இந்த திருத்தத்தை அனுமதிக்க இயலுமா? என்பதே ஆகும்.

8. மாண்பமை உச்சநீதிமன்றம் **Revajetu Builders and Developers Vs. Narayanasamy & sons 2009 AIR SEW 6647** என்ற வழக்கில்,

"If application is filed after commencement of trial, it must be shown that in spite of due diligence, such amendment could not have been sought earlier. The purpose and object of Order VI Rule 17 of the Code is to allow either party to alter or amend his pleadings in such manner and on such terms as may be just. Amendment cannot be claimed as a matter of right and under all circumstances, but the Court while deciding such prayers should not adopt a hyper-technical approach. Liberal approach should be the general rule particularly" என்றும் கூறியுள்ளது.

9. மேற்படி மாண்பமை உச்சநீதிமன்றத்தின் முன்தீர்ப்புகளின் அடிப்படையில் பார்க்கும் போது வழக்கு சொத்து விவரத்தில் சர்வே எண்.502,503,504 ஆகியவைகள் தற்போது 504/2, 504/1B1, 506/4C ஆகியவைககள் என்பது மனுதாரருக்கு அசல் வழக்கின் ஆணையர் அவர்கள் வழக்குச் சொத்தினை அளவீடு செய்யும் சமயம் தான்

தெரியவந்தது என்பதை அறியமுடிகிறது. மேற்படி மனுதாரருடைய வாதம் ஏற்புடையதாக உள்ளது. அசல் வழக்கானது வழக்கு சொத்தான 12 அடி அகலம் 300 அடி நீலம் கொண்ட பொது நடை பாதையான சர்வே எண்.527 ல் தொடங்கி சர்வே எண்.502,503,504 ஆகியவைகள் தற்போது சர்வே எண்.504/2, 504/1B1, 506/4C–யை கடந்து வாதியாகிய மனுதாரர் நடந்து சென்றும் ஆடு மாடு வாகன ஊர்திகள் சென்று வருவதை 1, 2 பிரதிவாதிகள் எதிர்மனுதாரர்கள் எந்த வகையிலும் தடுத்து நிறுத்தவோ அல்லது மேற்படி பாதையை அழித்து ஆக்கிரமிப்பு செய்யவோ கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், மேற்படி வழக்கை முழுமையாக தீர்வு காண இந்த திருத்தம் அவசியம் என்றும், மேற்படி திருத்தம் அசல் வழக்கின் தன்மையை எந்த வகையிலும் பாதிக்காது என்றும் எனவே, இம்மனுவினை அனுமதித்து உத்தரவிடுவது நீதியின் பால் உகந்ததாக இருக்கும் என்றும் இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

10. **இறுதியாக,** மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த தீர்ப்புரையானது சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு நேரடியாக

சொல்லப்பட்டு, கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு, பிழைநீக்கம் செய்யப்பட்டு 2025 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 3 ஆம் நாள் என்னால் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

**Sd/–சு. அபூர்வா,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**பழனி.**

**மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** : இல்லை

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** : இல்லை

**Sd/–சு. அபூர்வா,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**பழனி.**